திரு. எம். சுரேந்திரன் : கூட்டுறவு வங்கியில் போடப்பட்டிருக்கும் மூல தனம் எவ்வளவு? எவ்வளவு பங்குதாரர்கள் இருக்கிறார்கள் ? என்ன மாதிரி சூழல்கள் காரணமாக அந்தக் கூட்டுறவு வங்கி நிர்வாகக் குழு கலைக்கப் பட்டது ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : கூட்டுறவு வங்கி என்று சொல்லும் போது ஐந்தாறு வகை கூட்டுறவு வங்கிகள் இருக்கின்றன. அர்பன் பாங்கில் அரசு முதலீடு செய்வது இல்லை, கடன் கொடுப்பதும் இல்லை. சௌராஷ்டிரா பாங்கு அர்பன் பாங்கு வகையைச் சேர்ந்தது. சென்ட்ரல் பாங்கு, ஸ்டேட் பாங்கு, பிரைமரி லாண்ட் டெவலப்மென்ட் பாங்கு, ஸ்டேட் லாண்ட் டெவலப் மென்ட் பாங்கு ஆகியவற்றுக்கு அரசு பங்கு முதல் கொடுக்கிறது, கடனும் கொடுக்கிறது, மானியமும் கொடுக்கிறது.

பல்லடம் வட்டத்தில் பருத்திப்பயிர் முனைப்புத் திட்டம்

■ 221. வினா—**திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

கோவை மாவட்டம், பல்லடம் வட்டத்தில் எவ்வளவு ஏக்கர் பூமியில் பருத்திப்பயிர் முனைப்புத் திட்டம் செயல்படுத்த அரசு திட்டமிட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : கோவை மாவட்டத்தில் பல்லடம் தாலுக்கா பகுதி முழுவதிலும் 29,219 ஏக்கர் இறவை நிலப்பரப்பில் பருத்திப் பயிர் முனைப்பு திட்டம் செயல்பட்டுவருகிறது. இதில் பல்லடம் வட்டத்தில் மட்டும் சுமார் 4,130 ஏக்கர் நிலத்தில் பருத்திப்பயிர் முனைப்புத் திட்டம் செயல் பட்டு வருகிறது.

திரு. சு. துரைசாமி : நம்முடைய தமிழ்நாட்டில் இருக்கும் பஞ்சாலை களுக்குத் தேவையான பஞ்சு தேவையான அளவு உற்பத்தியாகாததின் காரண மாக வெளி மாநிலங்களில் இருந்தும், வெளி நாட்டில் இருந்தும் வாங்கப்படு கிறது. ஆகவே, இந்தத் திட்டத்தை விரைவாகத் தமிழ்நாடு முழுவதும் கொண்டு வர அரசாங்கம் திட்டம் வைத்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : பருத்தி தமிழ்நாட்டில் முக்கிய வணிகப் பயிர் என்பது எல்லோருக்கும் நன்றாகத்தெரியும். பத்து லட்சம் ஏக்கர்களில் இந்தப் பருத்தி சாகுபடி செய்யத் திட்டமிடப்பட்டிருக்கிறது. பருவ மழை பாதிப்பு காரணமாக 1968-69-ல் 6.96 லட்சம் ஏக்கரிலும், 1969-70-ல் 8.63 லட்சம் ஏக்கரிலும்தான், குறைவாக பருத்தி சாகுபடி ஆகி யிருக்கிறது. 1969—70-ல் பருத்தி உற்பத்தியின் அளவு 3.97 லட்சம் பேல்களா கும்.. 1970—71-ல் 4.90 லட்சம் பேல்களாகும். 1971—72-ல் இலக்கு 5.10 லட்சம் பேல்கள் உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

THIRU K. M. SUBRAMANIAM : Sir, is it a fact that last year there was heavy accumulation of very high grade cotton SUJATHA produced by the people of Tamil Nadu and people have been finding it difficult to dispose it and if so, what is the proposal the Government have got to see that that high grade cotton is disposed of?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : M.C.U. 5, சுஜாதா, பாரி போன்ற பருத்தி வகைகள் அதிக கண்டுமுதல் தரும் பருத்தி வகைகள். இவை

தேக்கம் இல்லாமல் எல்லா இடங்களுக்கும் வழங்கப்பட்டிருக்கிறது. அதற்கு வேண்டிய பயிர் பாதுகாப்பு முறைகளும் ஆங்காங்கு செயல்படுத்த திட்டங்கள் வகுக்கப்பட்டு நல்லமுறையில் செயல்பட்டு வந்திருக்கிறது.

திரு. கே. என். குமாரசாமி: இந்த முனைப்புத் திட்டத்தின் மூலம் எந்தெந்தப் பிரதேசத்தில் பருத்தியைப் பயிரிட அரசாங்கம் விரும்புகிறது? சுஜாதா போன்ற பருத்தி ரகம் விவசாயிகளிடத்தில் நஷ்டத்தை ஏற்படுத்து கிறது, குறிப்பாக பல்லடம் வட்டத்தில் விவசாயிகளுக்கு நஷ்டத்தை ஏற்படுத்தியிருக்கிறது என்பது அரசாங்கத்திற்கு தெரியுமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: பல்லடம் தாலுக்காவில் திருப்பூர் வட்டத்தில் 5,935 ஏக்கரிலும், சுல்தான் பேட்டையில் 5,229 ஏக்கரிலும், பல்லடம் வட்டத்தில் 4,130 ஏக்கரிலும், பொங்கலூர் வட்டத்தில் 4.925 ஏக்கரிலும், சூளுர் வட்டத்தில் 9,000 ஏக்கரிலும் பயிரிடப்பட வேண்டுமென்ற திட்டத்தை மத்திய முனைப்புத் திட்டத்தின்கீழ் சுல்தான்பேட்டை, பல்லடம், பொங்களூரிலும், மாநிலத் திட்டத்தின்கீழ் திருப்பூர் பகுதியிலும் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. அங்கு யாரும் இப்போது நஷ்டம் வந்ததாகச் சொல்லவில்லை. மேலும் அந்தத் திட்டத்தை விரிவுபடுத்துவதற்கு இப்போது நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது.

மதுரை பாலமேடு பஸ் போக்குவரத்து.

* 122. வினா.—திரு. பி. எஸ். மணியன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

மதுரை மாவட்டத்தில் மதுரையிலிருந்து பாலமேடு வரை நகரப் பேருந்து (City Bus) விடும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மதுரையிலிருந்து டி. மேட்டுப் பட்டி வரை உள்ளதற்போதைய வெளியூர் பேருந்து வழித்தடத்தை மதுரையிலின்று பாலமேடு என்ற நகர்ப் புற பேருந்து வழித்தடமாக மாற்றுவதற்கான ஒரு செயற்குறிப்பு மதுரை மாவட்ட போக்குவரத்து ஆணையரின் பரிசிலனையில் உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் ஒரு உரிமைப் பிரச்னை பற்றிய தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அது நாளைய தினம் எடுத்துக்கொள்ளப்படும்.

(2) கவன ஈர்ப்பு.

பல்லடம் தொகுதியில் மழையின்மையால் ஏற்பட்டுள்ள குடிநீர் பற்றுக்குறை குறித்து.

திரு. கே. என். குமாரசாமி: தலைவர் அவர்களே, இந்த ஆண்டு பருவத்திலும் கோடையிலும் மழை தவறியதின் காரணமாகப் பல்லடம் தொகுதியில் சுமார் 250 கிராமங்களில் குடிநீர்ப் பற்றுக்குறை ஏற்பட்டு மக்கள் துன்பத்திற்